தலைப்பு 258 – மாவட்ட செயலகம் - கண்டி - 2024

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 258 – கண்டி மாவட்ட செயலகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கண்டி மாவட்ட செயலகத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 26 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் கண்டி மாவட்ட செயலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 மே 29 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து கண்டி மாவட்ட செயலகத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் ஆகியவற்றுக்குரிய குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக் கூற்றுக்கள் அரசின் நிதிப் பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் கண்டி மாவட்ட செயலகத்தினதும் பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக் கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக் கூடும். எனது அறிக்கை கண்டி மாவட்ட செயலகத்தினதும் பாராளுமன்றத்தின் பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டிற்காக மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப் பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் கண்டி மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் ˙சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் கண்டி மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக

காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6. நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	மீளாய்வாண்டில் மாவட்ட செயலகத்தினால் கொம்ரோலர் ஜனரால் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா. 10,620,647 ஆக இருந்த போதும் நிதிக் கூற்றுக்களில் நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்று (ஏசிஎ 6 படிவத்தின்) பிரகாரம் அப்பெறுமதி ரூபா. 10,851,297 எனக் காண்பிக்கப்பட்ட காரணத்தினால் ரூபா 230,650 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது.	ஆண்டில் கொள்வனவு தொடர்பாக கொம்ட்ரோலர் ஜெனராலுக்கு அறிக்கையிடும் போது தவறுதலாக ரூபா. 280,650 தொகை அவ்வறிக்கை உள்ளடக்கப்படுவதற்கு முடியாமல் போன.தாக	குறித்த சீராக்கத்தை விரைவில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ii)	நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பாக கூற்றின் (ஏஎஸ்ஏ - 6 படிவத்தின்) குறிப்பிட்டிருந்த மொத்தம் ரூபா. 2,316,260,546 ஆன கட்டிடத்தின் பெறுமதி மற்றும் மொத்த ரூபா. 3,958,987,970 ஆக காணியின் பெறுமதியில் தெல்தோட்ட பிரதேச செயலகத்திற்கு உரித்தில்லாத மொத்தம் ரூபா. 4,950,000 ஆன 03 கட்டிடங்களின் பெறுமதி மற்றும் ரூபா. 5,000,000 பெறுமதியான காணியொன்று நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டிருந்தது.	போப்பிட்டிய நில செவன அலுவலகம் அமைந்துள்ள காணிக்காக கையேற்கும் முன்மொழிவு தயாரிக்கப்பட்டு பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு தொடர்புபட்டுள்ளதாகவும் வாடியகொட பல்நோக்கு கட்டிடங்கள் அரசின் நிதி ஏற்பாட்டின் பேரில் தெல்தோட்ட பிரதேச செயலகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட செயற் திட்டமொன்றாக இருப்பதால் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டதாகவும் அக்கட்டிடம் அமைந்துள்ள காணி பாத்தஹேவாட்ட பிரதேச சபைக்கு உரித்தாக கையளிப்பு உறுதி மூலம் பாத்தஹேவாட்ட பிரதேச சபைக்கு கையளிக்கப் பட்டுள்ளதாகவும் கலஹா நில செவன அலுவலகத்தை கையேற்க முன்மொழிவை தயாரிப்பதற்காக NBRO அறிக்கையைப் பெற்றுக் கொள்ள அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக.	உரித்துள்ள உள்ள சொத்துக்களை மாத்திரம் கணக்குகளில் உள்ளடக்கப்படுவதற்கும் சீராக்கம் செய்வதற்கும் விரைவில் உரித்தினைக் கையேற்பதற்கும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(iii)	வருடாந்த சொத்துக்கள் மென்மையாய்வு செய்யாமல் மொத்தம் ரூபா. 6,676,066,957 ஆன காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் ஏசீஏ 6 படிவத்தில் காண்பிக்கப்பட்டிருந்தது.	காணி மற்றும் கட்டிட பொருட்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்படாமை காரணமாக நி.பி 715 இன் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப்படவில்லை எனவும் காணி மற்றும் கட்டிட பொருட்கள் தொடர்பான பரிசோதனை வருடாந்தம் மேற்கொள்வதில் சிரமம் காணப்படுவதாகவும் விசேட பரிசோதனை 2025 ஆம் ஆண்டில் நடாத்தப்பட உள்ளதாக.	சொத்துக்களை கணிப்பீடு செய்து சரியான பெறுமதிகள் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும்.

(iv)	நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் 2024 திசெம்பர் 31 இல் உள்வாறு பயணிகள் போக்குவரத்து மோட்டார் வாகனங்களின் பெறுமதி ரூபா. 216,327,625 ஆக குறிப்பிடப்பட்டிருந்த போதும் மாவட்ட செயலகத்தனால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் தொடர்பான தகவல்களின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா. 248,950,000 ஆக இருந்தமையால் ரூபா. 32,622,375 ஆன வேறுபாடு காணப்பட்டது.	தவறுதலாக புதிய மதிப்பீட்டின் பிரகாரம் CIGAS நிகழ்ச்சித் திட்டத்தை நாளதுவரையாக்க முடியாதிருந்ததாக.	சரியான பெறுமதிகள் உள்ளடக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்ததல் வேண்டும்.

2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திருந்தன

(ஆ) கடந்த வருடத்திற்கு உரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன

3. நிதி மீளாய்வு

3.1 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்டுள்ள நிதியேற்பாட்டின் பயன்பாடு

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் நிதி ஏற்பாட்டில் கீழ் போகம்பர கால்வாய் அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் ரூபா 31.8 மில்லியனுக்கு கண்டி மாநகர சபைக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.		
(i)	2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 05 ½ மாதங்களில் செயற் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப் பட்டிருந்த போதும் கணக்காய்வு திகதி 2025 மார்ச் 17 ஆந் திகதி வரையில் அச்செயற் திட்டத்தினை முழுமையாக பூர்த்தி செய்வதற்கு தவறியிருந்தது. நேர் உழைப்பு அடிப்படையின் பிரகாரம் இச்செயற்திட்டத்தை செயற்படுத்து	பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.	முறையான பரிசோதனை யொன்றை மேற்கொள்ள கூடுதலாக கொடுப்பனவு செய்யபப்பட்டிருந்த குறித்த பணத்தை அறவிடுவதற்கும் செயற்திட்டத்தை விரைவில் செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	வதற்காக மாநகர சபைக்கு செலுத்த வேண்டிய பெறுமதி ரூபா. 23,343,746 ஆக இருந்த பெறுமானத்தை விட ரூபா. 4,756,123 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.		
(ii)	கொங்கிரீட் ஓரச் சுவர்களில் மேற்பரப்பில் அநேக இடங்களில் உயரம் குறைந்திருந்த கொங்கிரீட் சுவர்களில் அகலமான 300mm ஐ விட குறைவாக மற்றும் தேன் வதை (Honey comb) தெளிவாக முடிவாக இல்லாத நிர்மாணத்திற்காக ரூபா. 2.02 மில்லியன் மற்றும் முறையற்றதாக கம்பிச் சுற்றுடன் கொங்கிரீட் இடுவதற்காக ரூபா 22.2 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.	பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை.	முறையான தொழிநுட்ப பரிசோதனையொன்று மேற்கொண்டு நியம விவரக் குறிப்பு மற்றும் நியமங்களின் பிரகாரம் ஒப்பந்தகாரரைக் கொண்டு நிர்மாணத்தை மீண்டும் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அரசிற்கு நட்டமொன்று ஏற்பட்டிருந்ததால் அதனை அறவிட வேண்டும்.
(iii)	முதலாவது மற்றும் இரண்டாவது திட்டத்தின் பிரகாரம் 12mm கம்பி இட்டு நிர்மாணத்தை மேற்கொள்ள திட்டமிட்டிருந்த போதும் 16 mm மற்றும் 10 mm அளவிலான கம்பி இட்ட காரணத்தினாலும் முறையாக திட்டம் முன்வைக்கப்படாமல் மாநகர சபையில் இருந்த கம்பிகளைப் பயன்படுத்தி இந்நிர்மாணத்தை மேற்கொண்டமையால் ஆரம்ப மதிப்பீட்டினை விட 16,700 கி.கி அளவினால் கம்பியின் அளவு அதிகரித்திருந்தது.	பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை.	- மேற்படி -
(iv)	முதலாவது வரைபு வடிவமைப்பின் (drawings) பிரகாரம் வாய்க்காலின் கொங்கிரீட் சுவர் 1200mm உயரத்துடன் நிர்மாணிக்க வேண்டிய போதிலும் கண்டி மாநகர சபையின் தேவைப்பாட்டின் பேரில் வாய்க்காலின் ஒரு பக்கமாக வாகனங்களை நிறுத்தி வைக்கும் இடமொன்றாக பயன்படுத்தும் எதிர்பார்ப்பில் அப்பக்கச் சுவர் 3000 mm மற்றும் 2100 mm என உயர்த்தி நிர்மாணிக்கப்பட்டு மண் நிரப்புவதற்காக பட்டியல் கொடுப்பனவு செய்யப்பட்டதன் மூலம் அனர்த்த முகாமைத்துவ பிரிவிடம் உள்ள நிதியத்தில் திட்டத்தின் நோக்கத்திற்கு முரணாக பயன்டுத்தப்பட்டிருந்தது.	பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை.	- மேற்படி -

(ஆ)	13 பிரதேச செயலகங்களுக்குரிய சமுர்த்தி பிரிவினால் 2024 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்த மொத்தம் ரூபா. 67,504,990 ஆன சுழற்சி கடன்களில் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா. 5,448,474 தொகை அறவிடுவதற்கு இருந்ததுடன் அறவிடமுடியாத ஐயக்கடன் அளவு ரூபா. 1,650,507 ஆக இருந்தது.	கொவிட் தொற்று நிலைமை காரணமாக நலனாலிகள் பொருளாதார ரீதியில் சிக்கல்களுக்கு முகங் கொடுத்துள்ளதால் கடன் தவணைகளை முறைப்படி அறவிடமுடியாமல் இருந்ததாகவும் கடனை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாகவும்,	முறையான பரிசோதனையொன்றை மேற்கொண்டு உரிய நேரத்தில் கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பற்கும் அறவிடப்பட வேண்டிய பணத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மை

	அவதானிப்பு			கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் உடனான தொடர்பு	**பெறுமதி** **ரூபா**	**இணக்கமின்மை**		
(அ)	2022 ஆண்டு செப்டம்பர் 29 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 23 (iv) ஆம் பந்தி	4,288,650	தும்பனே பிரதேச செயலகத்தினால் 2024 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட 05 செயற்திட்டங்களை 05 வெளித்தரப்பினருக்கு உப ஒப்பந்தம் அளிக்கப்பட்டிருந்தது	உப ஒப்பந்தம் வழங்கப்பட்டால் அத்தகைய சங்கங்களை கறுப்பு பட்டியல் இடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக උප	அரச நிதிச் சுற்றறிக்கைக்கு முரணாக நடவடிக்கை எடுத்த தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும் .
(ஆ)	2017 ஜுன் 26 ஆம் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 7 ஆம் பந்தி	3,635,958	மீளாய்வாண்டில் கொள்வளவு செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் கைதவிர்ப்பு. தொடர்பான தகவல்களை கொம்ட்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் கண்டி மாவட்ட செயலாளர் மீளாய்வாண்டில் கைதவிக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக கொம்ட்ரோலர் ஜெனரல்	ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக கொம்ட்ரோலர் ஜெனரால் அலுவலகத்திற்கு அருகையிடப்பட்ட போதும் கைதவிர்ப்பு தொடர்பாக கொம்ட்ரோலர் ஜெனரால் அலுவலகத்திற்கு அறிக்கை இடப்பட்டு	சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து கொம்ட்றோலர் ஜெனரால் அலுவலகத்திற்கு அறிக்கை இடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

			அலுவலகத்திற்கு அறிக்கை இடப்பட்டு இருக்கவில்லை	இருக்கவில்லை என்பதாக.	
(இ)	2021 திசெம்பர் 09 ஆம் திகதிய 05/2021 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை பிரகாரம்	6,895,401,582	நிதி அல்லாத சொத்துக்கள் ஒவ்வொரு 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டு இறுதி திகதி வரை இருந்த காணி, கட்டிடங்கள் மற்றும் வாகனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு 12 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் மீள் மதிப்பீடு :செய்யப்பட்டு இருக்கவில்லை	காணி கட்டிடங்கள் மற்றும் வாகனங்கள் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் மதிப்பீடு செய்யப்படும் போது இடம்பெறும் தாமதங்கள் காரணமாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் மற்றும் அரச கணக்குகள் திணைக்களத்தின் ஆலோசனைகளின் பிரகாரம் உத்தியோகத்தர்களுடன் கூடிய குழுவொன்றினால் மீள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாகவும் எதிர்காலத்தில் மதிப்பீடு நடவடிக்கைகள் விலை மதிப்பீட்டு திணைக்களத்தின் ஊடாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து சொத்துக்களை உரிய காலத்தில் மதிப்பீடு செய்து கொம்ட்ரோலர் ஜெனரலிற்கு அறிக்யையிடப்பட வேண்டும்.

3.3 வரி தேவைப்பாடுகளுடன் இணக்கமின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2022 திசெம்பர் 22 ஆம் திகதிய எஸ்சீஏ/2022/ஈ/04 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் முற்பன நபர் வருமான வரி தொடர்பான ஆலோசனை கோவையின் 2 ஆம் பந்தியின் பிரகாரம் முற்பண நபர் வருமான வரி கணிப்பீடு போது மூன்று பிரதேச செயலகங்களின் நான்கு உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த மொத்தம் ரூபா 1,338,000 ஆன சமுர்த்தி கடமைப் படிகள் மாகாண சபை கடமைப்	நிதி ஏற்பாடு பெறுவனவுகள் மற்றும் கட்டுநிதி பெறுவனகள் தாமதம் இடம் பெற்றதால் உரிய மாதத்திற்குரிய படிகளை வழங்குவதற்கு முடியாததன் பேரில் இப்படிகளைப் பெற்றுக்கொண்ட மாதத்திலேயே சேவைகளில் ஈடுபட்ட வருமானத்தில் முற்பண நபர் வருமான வரி கணக்குகளுக்காக கருதி கொள்ளப்பட்டுள்ளதாக.	சுற்றறிக்கை மற்றும் ஏற்பாடுகளின் பிரகாரம் வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

படிகள் அபிவிருத்தி செயற்திட்ட படிகள் மற்றும் சாரதி படிகள் கருத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கந்துகர தசாப்தம் பத்துவருட விசேட ஒன்றிணைந்த கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உடதும்பர பிரதேச செயலக அதிகார பிரதேசத்திற்காக ரூபா 9,9,70,200 பெறுமதியான 174 வாயு ரைபில்கள் மற்றும் பெலட்ஸ் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன 2024 ஒக்டோபர் 11 ஆம் திகதி குறித்த வாயு ரைபில்கள் மற்றும் பெலட்ஸ் என்பன கட்டளையிடப்பட்டிருந்ததுடன் 89 வாயு ரைபில்கள் 2024 திசெம்பர் 02 ஆம் திகதியும் 85 வாயுரைபில்கள் 2025 ஜனவரி 16 ஆம் திகதியும் கிடைத்திருந்தன. எவ்வாறாயினும் நிறுவனத்திற்கு வாயு ரைபில்கள் கிடைப்பதற்கு முன்னர் 2024 ஒக்டோபர் 30 ஆம் திகதி கட்டளை இடப்பட்டு 174 வாயுரைபில்களும் உரிய விவரக் குறிப்புகளுக்கு இணங்கி உள்ளதாக குறிப்பிட்டு தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு உறுப்பினர்கள் மூன்று பேரால் கையொப்பமிடப்பட்டு அனைத்து வாயு ரைபில்களும் வழங்கப் படாமல் இருக்கையில் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி ரூபா 9,970,200 ஆன மொத்த பெறுமதியும் வழங்குனருக்கு செலுத்தப்பட்டிருந்தது.	2024 கந்துகர தசாப்தம் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்குரிய அனைத்து கொடுப்பனவுகளும் 2024 ஒக்டோபர் 30 ஆம் திகதி உள்ளவாறு செய்ய வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்ததால் நிறுவனத்துடன் தொலைபேசி கலந்து ரையாடலை மேற்கொண்டு ஜனவரி முதல் இரண்டு வாரங்களில் வாயு ரைபில்களை வழங்கும் பொருத்தத்தின் கீழ் உரிய காசோலையை எழுதி 174 வாயு ரைபில்களை பெற்றுக் கொள்ள முன்னர் காசோலை வழங்கப்பட்டதாக.	முறையற்ற வகையில் குறித்த பணத்தை கொடுப்பனவு செய்வதற்கு உரிய அனைத்து தரப்பினரும் முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	அஸ்வசும நலனாளிகள் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகளுக்காக உடதும்பர பிரதேச செயலகத்திற்குரிய 46 பிரிவுகளில் அறிக்கை கிடைக்காத இருக்கையில் அதற்காக ரூபா 392,000 ஆன படிகளுக்காக காசோலை எழுதி கையில் வைக்கப்பட்டிருந்தது	46 கிராம சேவையாளர் பிரிவுகளின் கிராம உத்தியோகத்தர்கள் இந்நிகழ்ச்சியுடன் தொடர்புபடுவதற்கு விருப்பத்தை தெரிவித்ததன் பின்னர் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியமை காரணமாக அந்த உத்தியோகத்தர்கள் குறித்த	ஒவ்வொரு வகையிலும் முழுமையான சரியான கொடுப்பனவிற்காக மாத்திரம் காசோலை எழுத வேண்டியதுடன் அவ்வாறு செய்யாத உத்தியோகத்தர்களுக்காக முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

	கடமையை நிறைவேற்றுதல் மற்றும் பணத்தை பெற்றுக் கொள்வதை நிராகரித்து அவர்களால் வழங்கப்பட்ட அறிக்கையை மீளப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அதன் பிரகாரம் இந்த செயற்பாட்டிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்தை அரச வருமானத்துக்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்ததாக	

3.5 வங்கி கணக்குகளை செயற்படுத்தல்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் திசம்பர் மாத வங்கி கணக்கு இணக்க கூற்றின் பிரகாரம் 3 பிரதேச செயலகங்களுக்குரிய மொத்தம் ரூபா 164,813 ஆன இனங்காணப்படாத கொடுப்பனவுகள் மற்றும் 04 பிரதேச செயலகங்களுக்குரிய மொத்தம் ரூபா 3,486,454 ஆன இனங்கானப்படாத பெறுவனவுகள் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	இந்த அனைத்து இனங்காணப்படாத பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் 2024.12.31 ஆம் திகதியின் பின்னர் இடம்பெற்றுள்ளதால் அப் பெறுவனகள் மற்றும் கொடுப்பனவுகள் நேரடியாக வங்கி கணக்குக்கு செலவு வைக்கப்பட்டுள்ளதாலும் தவறுதலாக மாகாண சபை கணக்குகளுக்கு கணக்கீடு செய்யப்பட்டுள்ளதாக.	இனங்காணப்படாத பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	06 பிரதேச செயலாளர்களுக்குரிய 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏனைய நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு கொடுப்பனவு செய்வதற்காக எழுதப்பட்ட மொத்தம் ரூபா 19,693,437 ஆன 196 காசோலைகள் வழங்கப்படாமல் கையில் வைக்கப்பட்டிருந்தன.	கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படாத காசோலை களுக்கு உரிய செயற்திட்டங்கள் அனைத்தின் வேலைகள் உரிய திகதியில் பூர்த்தி செய்யப்படாதிருந்த போதும் இறுதிக் கட்டத்தில் காணப்பட்ட காரணத்தினால் காசோலைகள் அச்சிடப்பட்ட போதிலும் வழங்காமல் கையில் வைக்கப்பட்டிருந்ததாக.	ஒவ்வொரு வகையிலும் முழுமையாக சரியான கொடுப்பனகளுக்காக மாத்திரம் காசோலை எழுதி கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் பூர்த்தி செய்யப்படாத செயற்பாடுகளுக்காக உறுதிச் சீட்டுக்களைத் தயாரித்து காசோலைகள்

			எழுதிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	வலல ஏ ரத்னாயக்க பாடசாலையில் தடுப்பு சுவர் நிர்மானத்திற்குரிய புதிய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படாமல் பக்கச் சுவர் வேறாகியமை (வளைந்த) நல்ல நிலைமைக்கு கொண்டு வருவதற்காக 2024 திசெம்பர் 31 ஆந் திகதி எழுதப்பட்ட ரூபா 4,776,716 பெறுமதியான காசோலை கணக்காய்வு சந்தர்ப்பமான 2025 ஏப்ரல் 08 ஆம் திகதி வரை மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட காலமாக கையில் வைக்கப்பட்டிருந்தது.	இந்த நிறுவனத்திற்குரிய உறுதிச்சீட்டுகள் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக பொறியியலாளர் பரிந்துரை கிடைத்துள்ளதால் காசோலை எழுதப்பட்டதாகவும் சேர்த்திட்டத்தின் தவறுகள் பின்னர் அறிக்கை இடப்பட்டதால் பெறுவோனுக்கு வழங்கப்படவில்லை என்பதாக.	- மேற்படி -

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 திட்டமிடல்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 ஜனவரி 24ஆம் தேதி ஜனாதிபதி செயலாளரின் PS/FID/ID/Circulars/1/2024 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் கிராமிய குழுக்களின் முன்மொழிவினை பெற்றுக் கொள்ளாமல் ரூபா 4,800,000 பெறுமதியான 19 நிர்மாணங்கள் மற்றும் பொருள் உதவி திட்டங்கள் மீளாய்வாண்டில் உரிய நடைமுறை ஒன்றிலிருந்து விலகி உறுப்பினர் விசேட அனுமதிப்பத்திர முறைமையின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்தது.	பன்முகப்படுத்தப்பட்ட விசேட அனுமதிப் பத்திரத்தின் கீழ் செயற்படுத்தப்பட்ட இந்த திட்டத்துக்காக கிராமிய குழுக்களின் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்படாத இருந்த போதும் அனைத்து திட்டங்களும் சாத்தியவள பரீட்சிக்கப்பட்டும் செயல்படுத்தப்பட்டதாக.	முறையான பரிசோதனையொன்று மேற்கொண்டு கிராமிய குழுக்களின் பரிந்துரை அடிப்படையில் திட்டங்கள் இனங்காணப்பட்டு நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தில் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.2 எதிர்பார்த்த விளைவு மட்டத்தை பெற்றுக்கொள்ளாமை

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கந்துக்கர தசாப்தம் 2024 - 2033 தசாப்தத்தின் விசேட ஒன்றிணைந்த கிராமிய அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் வறிய குடும்பங்களுக்காக வீட்டு வசதிகளை வழங்கும் செயற்திட்டத்தின் கீழ் உடதும்பர பிரதேச செயலக பிரிவில் 04 வறிய குடும்பங்களுக்காக ரூபா. 500,000 வீதம் ரூபா. 2,000,000 வீடமைப்பு உதவியாக கொடுப்பனவை செய்வதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த போதும் 04 நலனாளிகளுக்காக ரூபா 1,059,447 தொகை மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததால் திட்டத்தில் எதிர்பார்க்0பக்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.	இந்த வீடுகள் பகுதியளவு பூர்த்தி செய்ததன் காரணமாக ரூபா. 1,059,447 மாத்திரம் கொடுப்பவு செய்யப்பட்ட தாகவும், கணக்காய்வின் போது சுட்டிக்காட்டிதன் பின்னர் குறித்த பயனடைவோர் அழைத்து வீட்டை குடியிருப்பதற்கு பொருத்தமான பிரகாரம் அமைத்துக் கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டதாகவும் தற்போது அந்த வீடுகளில் குடியமர்ந்து இருப்பதாகவும்	எதிர்பார்த்த விளைவு மட்டத்தை அடைந்து கொள்வதற்கு வேலை திட்டம் ஒன்று தயாரிப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்
(ஆ)	2018 ஆம் ஆண்டு முதல் 2021 திசெம்பர் வரையான காலப் பகுதியில் ரூபா.103,212,106 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டு உடதும்ர பிரதேச செயலகத்திற்காக புதிய கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு இருந்தது. இந்நிறுவன ஒப்பந்ததாரரால் உடன்படிக்கை மதிப்பீட்டு விவரக் குறிப்புகளுக்கு இணங்க கட்டிடத்தை நிர்மாணிக்காமை, கட்டிடத்தில் நிர்மாண தவறுகள் அதிக அளவில் காணப்பட்டமை, கொங்கிரீட் கூரை நிர்ணயிக்கப்பட்ட தரத்தில் நிறைவேற்றாமை காரணமாக நீர் கட்டிடத்தினுள் சிந்துதல் போன்ற குறைபாடுகளை திருத்துவதற்காக மீளாய்வாண்டில ரூபா. 2,750,692 தொகை செலவு செய்து மீண்டும் திருத்தம் செய்ய வேண்டியிருந்தது.	2022 ஜனவரி மாதம் 26 ஆம் திகதி அளவில் புதிய கட்டிடம் திறக்கப்பட்டதுடன் அந்நாள் முதல் இந்த குறைபாடுகள் காணப்படுவதால் 2024 ஆம் ஆண்டில் ரூபா. 2,750,692 தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டிடத்தில் கடமைகளை புரிவதற்கு இயலுமான வகையில் அமைக்கப்பட்டதாக.	2022 ஆம் ஆண்டின் போது குறைபாடுகளை ஒப்பந்தக்காரர்களிடமிருந்து நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	நிர்ணயிக்கப்பட்ட பிரகாரம் மண்ணை நிறைக்காமல் தும்பனை பிரதேச செயலக காரியாலயத்தால் செயற்படுத்தப்பட்ட 03 ஓரச் சுவர் நிர்மாணிக்கும் செயற்திட்டங்களுக்கு மண் நிறைக்கும் செயற்பாடுகளுக்காக 61.27 கன மீட்டர் மண்ணின் அளவிற்கு ரூபா. 165,596 ஆன தொகை	இச்செயற்திட்டத்துக்கு கிடைத்த நிதி ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் காணப்பட்ட அதிக மழை வீழ்ச்சி காரணமாக மண் இரண்டு பக்கங்களும் கழுவிச்	நிர்ணயிக்கப்பட்ட பிரகாரம் மண்ணை நிரப்பி அந்த 3 செயற்திட்டங்களை முறையாக பூர்த்தி செய்வதற்கான வேலை திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும்.

	கொடுப்பனவு செய்யப்பட்டு இருந்தது.	செல்லப்பட்டு இருந்ததாகவும் இதன் பிறகு மண் நிறைக்கும் போது தொடர்பாக விசேட கவனம் செலுத்துவதாகவும் சுட்டிக்காட்டப்பட்ட இடங்களில் மண்ணை நிரப்பி பூர்த்தி செய்துள்ளதாக.	
(ஈ)	பொறியியலாளர் திட்டம் தயாரிக்கும் போது ஏற்பட்ட பலவீனங்கள் காரணமாக மீளாய்வாண்டில் ரூபா. 29,586,375 ஆன செலவினம் ஒன்று மேற்கொள்ளப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட வளல ஏ ரத்னாயக வித்தியாலயத்தின் தடுப்பு சுவர் நிர்மாணிக்கப்பட்டு 2 மாதங்களுக்குள் வளைந்து இருந்ததுடன் கட்டமைப்பு மற்றும் புவியியல் விசேட நிபுணர் ஒருவரின் ஆலோசனையின் பிரகாரம் மதிலை உரிய நிலைக்கு கொண்டு வருவதற்கு தேவையான நடவடிக்கைகளை 2025 ஏப்ரல் 05 ஆம் திகதி வரை எடுக்கப்படாதிருந்ததுடன் மதிலின் நிலைத்திருத்தன்மை நிச்சயமற்றதாக இருந்தது.	வளல ஏ ரத்னாயக்க வித்தியாலயத்தின் தடுப்பு சுவர் நிர்மாணிக்கப்பட்டு மூன்று மாதங்கள் அளவில் கடந்த பின்னர் அதை ஏற்பட்ட மினி சூறாவளி நிலைமை மற்றும் மழை காரணமாக இந்த இடத்திற்கு தாக்கமளித்துள்ளதாகவும் இவ்வாறான ஆபத்தொன்றுக்காக திட்டம் இடப்படாது இருந்தத்துடன் இந்த அனர்த்த நிலைமை அடிப்படையில் இடம்பெற்ற தாகவும் அத்தோடு நீர் வழிந்தோடுவதை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள துடன் அதற்காக சுவரின் அமைப்பை மாற்றுவதை தவிர்ப்பதற்கு சுவருக்கு கம்பியை தொடர்புபடுத்துதல் மேற்கொள்ளப்பட்டு நிலைமையை முழுமையாக கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளதாக	தொழில்நுட்ப விசேட ஆலோசனை பெற்றுக் கொண்டு சுவரின் நிர்ணயிக்கப்பட்ட நிலைமையை உறுதிப்படுத்தும் வகையில் சிகிச்சை அளிப்பதற்கு விரைவில் வேலைதிட்டம் என்று மேற்கொள்ளப்பட வேண்டும்.
(உ)	கெடவல சந்தியிலிருந்து நெஹினிவெல வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா. 23,724,000 தொகைக்கு ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கை செய்யப்பட்டு அதற்காக மீளாய்வாண்டில் ரூபா. 20,689,384 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன		
(i)	வீதியில் மேற்பரப்பு 1500 மீட்டர் நீளத்திற்கும் 5.5 மீற்றர் அகலத்திற்கும் வீதி இரண்டு பக்கங்களிலும் தோட்பட்டை 0.5 மீற்றர் அகலத்தில் அமைப்பதற்காக உடன்படிக்கை	நிதி ஒதுக்கீட்டை செய்வதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டின் இணங்கப்பட்ட வீதி ஒன்றில் 40 mm தடிப்பில் காபட் இடுவதற்காக மிகவும்	முறையான பரிசோதனை ஒன்று மேற்கொண்டு முறையற்ற வகையில் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள

	செய்யப்பட்டிருந்த போதும் வீதி 850 மீற்றர் நீளம் அளவில் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டதால் எதிர்பார்க்கப்பட்ட அளவில் 43 சதவீதம் நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. வீதியில் நீளம் 920 மீற்றர் நிர்மாணிக்கப்பட்டதாக பட்டியல் உறுதிப்படுத்தப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டு இருந்தது. அதன் பிரகாரம் வீதி மேற்பரப்பில் நிறைவேற்றப் படாத 70 மீற்றர்கள் வீதிக்காக 4.3 மற்றும் 4.4 வேலை விடய இலக்கத்தின் கீழ் அஸ்பொலட் ஊற்றுவதற்காக ரூபா 1,540,760 தொகை கூடுதலாக கொடுப்பனவு செய்யப் பட்டிருந்தது. ஒப்பந்தக்காரருக்கு அஸ்பொலட் வழங்கிய கம்பனியிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட உறுதிப்படுத்தலின் பிரகாரம் 844 மெற்றிக் தொன் அஸ்பொலட் அளவு மாத்திரமே ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் 900 மெற்றிக் ஒன்று செய்யப்பட்ட காரணமாக 56 மெற்றிக் தொன்களுக்காக ரூபா 1,260,000 கூடுதலாக கொடுப்பது செய்யப்பட்டிருந்தது.	சிறிய அளவிலான ABC ா இடுவதற்கு கருத்தில் கொள்ளப்பட்ட போதும், வீதி நடைமுறையில் பரீட்சிக்கும் போது உடைந்திருந்த வீதியின் இரண்டு பக்கமும் உடைந்த அதிகளவிலான குழிகள் இருந்ததால், கிடைத்த நிதி ஏற்பாட்டு எல்லைக்குள் மதிப்பீடு திருத்தம் செய்யப்பட்டு மொத்த தூரத்தையும் மீண்டும் மதிப்பீடு செய்தல் ஆக்கபூர்வமாக இல்லாததால், வீதியில் குறுக்கு மொத்த தூரத்திற்கும் 1500 அஸ்பொலட் மெற்றிக் தொன் அளவில் தேவையாக இருப்பதால் மதிப்பீடு திருத்தம் செய்யப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட உயரம் நிர்ணயிக்கப்பட்ட அமைப்பு மற்றும் தரங்களை பேணி சென்று ஆக்கபூர்வமாக நிறைவேற்றக்கூடிய ஆகக்கூடிய அளவு 920 மீற்றர் அளவில் மாத்திரம் அபிவிருத்தி செய்யப்பட்டதாக.	உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கும் மேலதிகமாக செலுத்திய பணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	மொத்த வீதி மேற்பரப்புக்கு ABC இடுவதற்காக 100 கன மீட்டர் அளவிலான மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் வீதியில் இருந்து 43 சதவீதம் அளவு நிர்மாணிக்கப்படாது இருக்கையில் மொத்த வீதி மேற்பரப்பிற்காக 290 கன மீட்டர் ABC இற்காக ரூபா 1,885,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.	நிதிஏற்பாட்டை வழங்குவதற்கு பயன்படுத்திய RDA மதிப்பீடு தவறுடன் கூடியதாகவும் அதனை சரியாக்குவதற்கு நிதி ஏற்பாடு இல்லாமை காரணமாக இந்நிலைமை உருவாகியதாக வும் வீதியை விரிவாக்கு வதற்கும் குழிகளை நிரப்புவதற்கும் 290 கன மீட்டர் ABC செலவானதாகவும்	- மேற்படி -
(iii)	மதிப்பீட்டின் 05 இலக்க வேலை விடயத்தின் பிரகாரம் 135 மீட்டர் நீளமான வடிகாணொன்று நிர்மாணிப்பதற்காக ரூபா. 877,500 தொகையும் 13 ஆம் இலக்க வேலை விடயத்தின் பிரகாரம் வீதியின் இரு பக்கங்களிலும் தோட்புறங்களை அமைப்பதற்காக 30 கன மீட்டர் கொங்கிரீட்டிற்காக ரூபா. 90,000 உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த	நிதி ஒதுக்கீடு செய்வதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு உள்ளடங்கும் அநேகமான விடயங்கள் நடைமுறையில் வீதிக்காக பொருந்தாததன் பேரில் அதில் குறிப்பிடப்பட்ட உருப்படிகளை நிறைவேற்றும் சிக்கல் உருவாகியதால் வீதிக்காக கூடிய இடமொன்றை வழங்குவதற்காக ABC இரு	முறையான பரிசோதனை மேற்கொள்ளாமல் மதிப்பீட்டை தயாரித்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

